## கடும் சிலிண்டர் தட்டுப்பாடு!

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!



தமிழ் நாட்டிற்குத் தேவையான வளர்ச்சி திட்டங்களை வழங்காமலும், ஏழை, எளிய மக்களின் அன்றாட வாழ்வை பாதிக்கும் வகையில் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை கண்டித்தும், ஒன்றிய பா.ஜ.க. மற்றும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.ரகுபதி தலைமையிலும், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் முன்னிலையிலும், மாநகர பொறுப்பாளர்கள் துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ் ஆகியோர் நன்றியுரையிலும் மதச் சார்பற்ற ஜனநாயக கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் புதுக்கோட்டையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா, மேயர் திலகவதி செந்தில், பெ.ராஜேஸ்வரி, அ.ரெத்தினம், என்.சாத்தையா, எம்.எம்.பாலு, ஆ.செல்லத்துரை, மா.மணிவேலன், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், டி. அப்புக்காளை, கூட்டணி கட்சி தலைவர்கள் பெனட் அந்தோணிராஜ், எஸ்.கே.கலியமூர்த்தி, சங்கர், அஸ்ரப் அலி, அப்துல் கனி, அப்துல் ஜப்பார், சலாஹுதின் மற்றும் ஏராளமானோர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் நடைபெற்ற,தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை, அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை என்ற முன்னெடுப்பின் மூலம் ஒன்றிய அரசையும். அதற்கு துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேர்தல் பணிக்குழுச் செயலாளர் பரணி இ.ஏ.கார்த்திகேயன், அறந்தாங்கி நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன், அறந்தாங்கி நகராட்சி தலைவர் இரா.ஆனந்த், மகேஸ்வரி சண்முகநாதன், சக்திவேல் , மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தாராபுரம் நகராட்சி முன்னாள் அலுவலகம் முன்பு அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழக கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டிற்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை வழங்காமலும், ஏழை எளிய மக்களின் அன்றாட வாழ்வை பாதிக்கும் வகையில் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையைக் குறைப்பதாக ஏமாற்றியும் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் இன்று (15.03.2026) கடலூர் மேற்கு மாவட்டம் விருத்தாசலம் நகர கழகத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் சி.வெ. கணேசன் கலந்து கொண்டு கண்டன முழக்கங்கள் எழுப்பினர்.



தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை; அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை! தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சாபில் கும்பகோணம் மாநகரம். காந்தி பூங்கா அருகே நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கண்ட உரையாற்றினார். இந்த கண்ட ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமை செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட கழக ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள், தோழமைக் கட்சிகளின் மாவட்ட மாவட்ட நிர்வாகிகள் தொண்டர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



உதகை கிழக்கு மற்றும் மேற்கு நகர கழகம் சார்பில் உதகை ஏ.டி.சி., பகுதியில் கிழக்கு நகர பொறுப்பாளர் ஜார்ஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில், நகரமன்ற தலைவர் வாணீஸ்வரி, ஊட்டி எம்.எல்.ஏ., கணேஷ், மாவட்ட தலைவர் நாகராஜ், மதிமுக மாவட்ட செயலாளர் சிவகுமார், சி.பி.எம் சங்கரலிங்கம், மமக மாவட்ட செயலாளர் அபுதாஹீர், விசிக தொகுதி பொறுப்பாளர் கட்டாரி, மஜக மாவட்ட செயலாளர் பெரியார் கார்த்திக், தேமுதிக நகர செயலாளர் அபுதாகீர் மற்றும் திமுக தோழமை கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டனர்.



ஒன்றிய பா.ஜ.க. அரசின் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்து குன்னூர் விபி தெரு கலைஞர் திடலில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பா.மு முபாரக் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசின் தவறான முடிவுகளால் நாடெங்கும் ஏற்பட்டுள்ள கடுமையான சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்தும், அதற்கு உறுதுணை இருக்கும் அ.தி.மு.க.வையும் கண்டித்து, சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., தலைமையில் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் ஏ.விஜயகுமார் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதன் அடிமை அ.தி.மு.க. உட்பட கூட்டணி கட்சிகளையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள், கரூர் மாவட்டம் முழுக்க 37 இடங்களில் நடைபெற்றது. கரூர் தலைமை தபால் நிலையம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பேசினார். மாநில, மாவட்ட , மாநகர, நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் , முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பின்படி 15.03.26 அன்று திருவாரூர் மாவட்டம் ஒன்றிய நகர, பேரூர் பகுதிகளில் நடைபெற்ற ஒன்றிய அரசின் திறனற்ற நிர்வாகத்திற்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருவாரூர் புகை வண்டி நிலையம் எதிரே மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்று கண்டன உரையாற்றினார். உடன் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.